## 1. மலைத்தோட்ட பயிர்களுக்கான உர அட்டவணை

**பாக்கு**

ஐந்து வயதிற்குக் குறைவாக உள்ள மரங்களுக்கு 50 கிராம் தழைச்சத்து, 20 கிராம் மணிச்சத்து, 25 கிராம் சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை இடவேண்டும். காய்க்கக்கூடிய ஐந்து வயதான மரங்களுக்கு மரம் ஒன்றிற்கு 10 முதல் 15 கிலோ வரை தொழு எரு அல்லது பசுந்தாள் உரம் இடவேண்டும். இவற்றுடன் 100 கிராம் தழைச்சத்து, 40 கிராம் மணிச்சத்து, 150 கிராம் சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய இராசயன உரங்களை ஜனவரி - பிப்ரவரி மாதங்களில் இடவேண்டும். ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாக உள்ள மரங்களுக்கு மேலே கூறிய உரங்களில் பாதி அளவு இடவேண்டும்.

**வெற்றிலை**

| உரங்கள் (கிலோ ஒரு எக்டருக்கு) | அடியுரமாக | மேலுரம் (3 தவணைகளாக) |
|---|---|---|
| தழை | 37.5 | 112.5 |
| மணி | 100 | 0 |
| சாம்பல் | 50 | 0 |

தொழு உரத்துடன், இரசாயன உரங்களை 150:100:50 கிலோ / எக்டர் என்ற அளவில் இடவேண்டும். மணி மற்றும் சாம்பலை சத்துக்களை அடியுரமாக இடவேண்டும். தழைச்சத்தை 4 தவணைகளாக 45 நாட்கள் இடைவெளியில் இடவும். முதல் தவணையை அடியுரமாக தொழு உரத்துடன் கொடுக்கவும். 150 கிலோ தழைச்சத்தை சம அளவில் யூரியா மற்றும் தொழு உரம் வாயிலாகக் கொடுக்கலாம். தழைச்சத்தை வேப்பம் புண்ணாக்கு கலந்து யூரியாவாக இருப்பின், 100 கிலோ தழைச்சத்து / எக்டர் போதுமானது.

**முந்திரி**

| உரங்கள் (மரம் ஒன்றுக்கு) | ஒரு வயதான மரம் ஒன்றிற்கு | 2 வயது மரம் | 3 வயது மரம் | 4 வயது மரம் | 5ம் ஆண்டு முதல் |
|---|---|---|---|---|---|
| தொழு உரம் (கிலோ) | 10 | 20 | 20 | 30 | 50 |
| தழை (கிராம்) | 70 | 140 | 210 | 280 | 500 |
| மணி (கிராம்) | 40 | 80 | 120 | 160 | 200 |
| சாம்பல் (கிராம்) | 60 | 120 | 180 | 240 | 300 |

ஒவ்வொரு முறையும், உரங்களை நவம்பர் - டிசம்பர் மாதத்தில் இடவேண்டும். இரண்டு பருவமழை பொழியும் இடங்களில் உரங்களை இரண்டாகப் பிரித்து ஜுன் - ஜுலை மாதங்களில் ஒருமுறையும், அக்டோபர் - நவம்பர் மாதங்களில் இரண்டாவது முறையும் இடவேண்டும்.

**கோகோ**

மூன்று வயது வரை ஆன இளம் செடிகளுக்குச் செடி ஒன்றிற்கு 50 கிராம் தழைச்சத்து, 20 கிராம் மணிச்சத்து, 70 கிராம் சாம்பல் சத்து தரக்மூடிய உரங்களை இடவேண்டும். மூன்று வயதிற்கு மேற்பட்ட செடிகளுக்கு, செடி ஒன்றிற்கு 100 கிராம் தழைச்சத்து 96 கிராம் மணிச்சத்து 140 கிராம் சாம்பல்சத்து தரக்கூடிய உரங்களை இடவேண்டும். மேற்கண்ட உரங்களை இரண்டாகப் பிரித்து ஏப்ரல் - மே மற்றும் ஆகஸ்ட் - செப்டம்பர் மாதங்களில் இடவேண்டும்.

**தென்னை**

ஐந்தாம் ஆண்டு முதல் தென்னை மரங்களுக்கு 50 கிலொ தொழு உரம் அல்லதுமக்கிய உரம் அல்லது பசுந்தாள் உரமிடவேண்டும். மேலும் தென்னையின் அடிப்பாகத்தில் இருந்து 1.8 மீட்டர் ஆரத்தில் உள்ள வட்டப்பாத்தி முழுவதும் கீழ்க்காணும் உரங்களாவன

| | | |
|---|---|---|
| யூரியா | - | 1.3 கிலோ (தழைச்சத்து 560 கிராம்) |
| சூப்பர் பாஸ்பேட் | - | 2.0 கிலோ (மணிச்சத்து 320 கிராம்) |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ் | - | 2.0 கிலோ (சாம்பல் சத்து 1200 கிராம்) |

என்ற கணக்கில் இடடு கொத்தியபின் நீர் பாய்ச்சவேண்டும். உரமிடும்போது மண்ணில் தகுந்த ஈரம் இருக்கவேண்டியதும் அவசியமாகிறது. மேலே கூறியுள்ள உர அளவை இரண்டாப் பிரித்து ஆடி மற்றும் மார்கழி மாதங்களில் இடலாம். இரண்டு, மூன்று மற்றும் நான்காம் ஆண்டுகளில் தென்னங்கன்றுகளுக்கு முறையே 1/4, 1/2 மற்றும் 3/4 பகுதி அளவில் மேலே கூறப்பட்ட உரத்தை இடவேண்டும். மேலே பரிந்துரைக்கப்பட்ட உரங்களில் 75 சதவிகிதத்தை ஒவ்வொரு மாதமும் தென்னைக்குப் பாயும் நீரில் கலந்து விடலாம். பாஸ்பரஸ் உரத்தை மட்டும் சூப்பர் பாஸ்பேட்டாக வட்டப்பாத்திகளில் இடலாம் அல்லது நல்ல நீர் கிடைக்குமாயின் டி.ஏ.பியாக சொட்டு நீர்ப்பாசனம் மூலமாகவும் இடலாம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தென்னை ஊக்க மரம்

காய்க்கும் மரங்களுக்கு, வேர்மூலமாக தென்னை ஊக்க உரத்தை ஒரு மரத்திற்கு 200 மில்லி அளவில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கொடுக்கவேண்டும்.

தென்னைக்கு நுண்ணுயிர் உர பரிந்துரைகள்

50 கிராம் அஸோஸ்பைரில்லம் + 50 கிராம் பாஸ்போபாக்டீரியா அல்லது 100 கிராம் அஸோஃபாட் உடன் 50 கிராம் வேர் உடபூசணத்தை தேவையான அளவு கம்போஸ்ட் அல்லது தொழு உரத்துடன் கலந்து இளம் வேர்களில் படும்படி 6 மாதங்களுக்கு ஒரு முறை இடவும். இராசயன பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களோடு உயிர் உரங்களை கலக்கக்கூடாது.

அங்கக கழிவு சுழற்சி

சணப்பு, அவுரி, கலப்பகோனியம், தக்கைப்பூண்டு ஆகிய ஏதாவது ஒரு பசுந்தாள் உரத்தைப் பயரிட்டு பூக்கும் தருணத்தில் உழவு செய்துவிடவேண்டும். சணப்பையை ஒரு வட்டப்பாத்திக்கு 50 கிராம் என்ற அளவில் விதைத்து பூக்கும் தருணத்தில் கொண்டு மண்ணோடு கலந்துவிடவேண்டும். மேலும் தென்னை நார்க்கழிவு அல்லது தென்னை மட்டைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மண்புழு உரம் மற்றும் மற்றும் மக்கிய கழிவுகளையும் இட்டு சுழற்சி செய்யலாம்.

**எண்ணை பணை**

| வயது | உரங்கள் (கிராம் / மரம் / வருடம்) | | |
|---|---|---|---|
| | தழை | மணி | சாம்பல் |
| முதல் வருடம் | 400 | 200 | 400 |
| இரண்டாம் வருடம் | 800 | 400 | 800 |
| மூன்றாம் வருடம் | 1200 | 600 | 2700 |

**இரப்பர்**

ரப்பர் மரத்தில் பால் எடுக்குமுன்னர்: நடவின் போது ஒரு குழியில் 12 கிலோ மக்கு உரம் (அ) மக்கிய தொழு உரம் மற்றும் 120 கிராம் ராக்பாஸ்பேட் (பாறை உப்பு) இடவேண்டும். கீழ்க்கண்ட அட்டவணையில் 10:10:4:1.5 விகிதம் தழை, மணி, சாம்பல் மற்றும் மெக்னீசியம் இடவேண்டும்.

| **நடவு செய்த பின் (மாதம்)** | **உரச்சத்து இடும் தருணம்** | **பரிந்துரை செய்யப்படும் அளவு** | |
|---|---|---|---|
| | | 10:10:4 | 12:12:6 |
| 3 | செப்டம்பர் / அக்டோபர் | 225 கிராம் | 190 கிலோ |
| 9 | ஏப்ரல் / மே | 445 கிராம் | 380 கிலோ |
| 15 | செப்டம்பர் / அக்டோபர் | 450 கிராம் | 380 கிலோ |
| 21 | ஏப்ரல் / மே | 450 கிராம் | 480 கிலோ |
| 27 | செப்டம்பர் / அக்டோபர் | 550 கிராம் | 480 கிலோ |
| 33 | ஏப்ரல் / மே | 550 கிராம் | 380 கிலோ |

| | | | |
|---|---|---|---|
| 39 | செப்டம்பர் / அக்டேபர் | 450 கிராம் | 380 கிலோ |

நடவு செய்த 5வது வருடம் முதல் மேற்கூறிய கலவையினை 400 கிராம் / எக்டர் என்ற அளவில் ஏப்ரல் / மே மற்றும் செப்டம்பர் / அக்டோபர் மாதத்தில் இடவேண்டும்.

இரப்பர் பால் எடுக்கும் மரங்களுக்கு: வருடத்திற்கு இரண்டுமுறை 12:6:6 தழை, மணி, சாம்பல் சத்து தரும் கலவையினை 400 கிலோ / எக்டர் என்ற அளவில் இடவேண்டும். மெக்னீசியம் பற்றாக்குறை இருக்கும் தருணத்தில் 100 கிலோ கலவைக்கு 10 கிலோ மெக்னீசியம் சல்பேட் இடவேண்டும்.

**தேயிலை**

நாற்றாங்காலில் ஊட்டச்சத்து மேலாண்மை

வளர்ச்சியின் தன்மைக்கேற்ப நாற்றுக்களைப் பிரித்து தாங்கு குச்சிகள் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு 15 நாள் இடைவெளியிலும் 30 கிராம் நாற்றாங்காலுக்குரிய கலவையினை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து 4 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நாற்றுகளுக்கு இடவேண்டும்.

உரக்கலவை

| | | |
|---|---|---|
| அம்மோனியம் பாஸ்பேட் | - | 35 பாகம் |
| பொட்டாசியம் சல்பேட் | - | 15 பாகம் |
| மெக்னீசியம் | - | 15 பாகம் |
| முரைட் அப் பொட்டாஷ் | - | 12 பாகம் |
| துத்தநாக சல்பேட் | - | 3 பாகம் |
| மொத்தம் | - | 80 பாகம் |

நடவு செய்த இரண்டாவதுமாதம் முதல் உரமிடுதல் வேண்டும். ஆண்டிற்கொருமுறை மணிச்சத்து தரும் ராக்பாஸ்பேட் (பாறை உப்பு) 80 -100 கிலோ / எக்டர் என்ற அளவில் இடவேண்டும். அதன் பின்னர் இரண்டு வருடங்களுக்கொருமுறை இடவேண்டும். மேலும் முதல் 3 ஆண்டுகளுக்கு தழை மற்றும் சாம்பல் சத்தினை 2:3 விகிதம் என்ற அளவிலும் அதன் பின்னர் 1:1 என்ற விகிதத்தில் இடவேண்டும்.

| வருடம் | ஒரு வருடத்திற்கு ஒரு எக்டருக்கு தேவையான உர அளவு | | பிரித்து இடும் அளவு | ஒரு செடிக்கு (கிராம் தேவையான) | |
|---|---|---|---|---|---|
| | தழைச்சத்து | மணிச்சத்து | | அம்மோனியம் சல்பேட் | யூரியா |
| முதல் வருடம் | 180 | 270 | 5 | 13 | 27 |
| இரண்டாம் வருடம் | 240 | 360 | 6 | 23 | 15 |
| மூன்றாம் வருடம் | 300 | 450 | 6 | 29 | 18 |
| நான்காம் வருடம் முதல் | 300 | 300 | 6 | 33 | 19 |

பருவ மழை ஆரம்பித்த பின் உரமிடுதல்வேண்டும். மேற்கூறிய உரங்களை தண்டுப் பகுதிக்கருகாமையில் இடாமல் சற்று தள்ளி இடவேண்டும்.